இந்த நாள்

- சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 28-ம் நாள். சனிக்கிழமை. தேய்பிறை.
- திதி : சஷ்டி நாள் முழுவதும்.
- நட்சத்திரம் : மிருகசீரிடம் இரவு 11.21 மணி வரை; அதன் பிறகு திருவாதிரை.
- யோகம் : சித்த யோகம்.
- நல்ல நேரம் : காலை 8.00 - 9.00; மாலை 4.45 - 5.45.
- ராகு காலம் : காலை 9.00 - 10.30 மணி வரை.
- எமகண்டம் : மதியம் 1.30 - 3.00 மணி வரை.
- சூலம் : கிழக்கு, பரிகாரம் : தயிர்.

தினகரன்
பெரம்பலூர் / அரியலூர்

வானிலை

இன்று		நாளை	
அதிகபட்சம்	குறைந்தபட்சம்	அதிகபட்சம்	குறைந்தபட்சம்
32 C / 89.6 F	24 C / 75.2 F	32 C / 89.6 F	25 C / 77 F

இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு.

வேளாண் களம் பக்கம் 12

விஜிலென்ஸ் ரெய்டு ரூ.60 ஆயிரம் பறிமுதல் பக்கம் 13

பெரம்பலூர் மாவட்டத்தில்

ஆசிரியர் தகுதி தேர்வு: 2 மையங்களில் 370 பேர் எழுதினர்

பெரம்பலூர்,அக்.15: பெரம்பலூர் மாவட்டத்தில் டெட் தேர்வு எனப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வு 2மையங்களில் நேற்றுதொடங்கியது. 370 பேர் தேர்வெழுதினர்.

டிஆர்பி எனப்படும் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித்தேர்வு தாள்-1க்கான தேர்வு, தமிழகமெங்கும் 14ம்தேதி தொடங்கி வருகிற 19ம்தேதி வரை நடைபெறுகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர் அருகேதிருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி, பெரம்பலூர்- துறையூர் சாலையிலுள்ள, பெரம்பலூர் தனலெட்சுமி சீனிவாசன் பொறியியல் கல்லூரி, பெரம்பலூர் அருகே எளம்பலூர் எம்ஜிஆர் நகரிலுள்ள தந்தை ஹேன்ஸ் ரோவர் பொறியியல் கல்லூரி ஆகிய 3 மையங்களில் ஆசிரியர் தகுதித்தேர்வு நடைபெறத் தேர்வுசெய்யப்பட்டுள்ளன. இந்தத் தேர்வினை ஆசிரியர் பயிற்சி மற்றும் பிஎட் தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பித்து எழுதுகின்றனர். நேற்று(14ம்தேதி) பெரம்பலூர் ஸ்ரீராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி தேர்வு மையத்தில், காலையில் 90 பேர் மதியம் 90பேர் என 180பேர் ஆசிரியர் தகுதித் தேர்வை எழுதினர். பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் பொறியியல் கல்லூரி தேர்வு மையத்தில் காலையில் 95பேர், மதியம் 95பேர் என மொத்தம் 190பேர் தேர்வு எழுதுகின்றனர். இதன் படி 2 மையங்களில் நேற்று 370பேர் ஆசிரியர் தகுதித் தேர்வினை எழுதினர். ரோவர் பொறியியல் கல்லூரி தேர்வு மையத்தில் வருகிற 17ம்தேதி முதல் ஆசிரியர் தகுதித் தேர்வு தொடங்கி நடக்கிறது. தேர்வு மையங்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நியமிக்கப்பட்டுள்ள தேர்வு அலுவலர்கள் மற்றும் பெரம்பலூர் மாவட்ட முதன்மை க்கல்வி அலுவலர் அறிவழகன், பெரம்பலூர் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை) குழைந்தைராஜன், (தொடக்கக் கல்வி) அண்ணாதுரை, (தனியார் பள்ளிகள்) சண்முக சுந்தரம் ஆகியோர் நேரில் ஆய்வுசெய்தனர். இந்த ஆய்வுகளின் போது, பெரம்பலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள் ரமேஸ், முத்துக்குமார் ஆகியோர் உடனிருந்தனர். ஆசிரியர் தகுதித் தேர்வை யொட்டி முன்கூட்டியே ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி, தனலெட்சுமி சீனிவாசன் பொறியியல் கல்லூரி தேர்வு மையங்களில் 13ம்தேதி மாதிரித் தேர்வு நடத்தப்பட்டது குறிப்பிடத் தக்கது.

ஆசிரியர் தகுதி தேர்வுநேற்று முதல் துவங்கியதை யொட்டி பெரம்பலூர் ராமகிருஷ்ணா கல்லூரி தேர்வு மையத்தில் தேர்வு எழுத வந்த பெண்கள் தேர்வு அறைக்கு செல்வதற்கு முன் ஹால் டிக்கெட் பரிசோதனை செய்து உள்ள அனுமதிக்கப்பட்டனர்.

வேப்பூர்

ஊராட்சி ஒன்றியக்குழு சாதாரண கூட்டம்

குன்னம், அக்.15: பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றிய குழுவின் கவுன்சிலர் சாதாரண கூட்டம் கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தின் தணிக்கை அறிக்கைகள் மற்றும் பல்வேறு செலவினங்கள் குறித்த தீர்மானங்கள் நிறைவேற்ற கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வேப்பூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் பிரபா செல்லப்பிள்ளை (திமுக) தலைமை வகித்தார். துணைத்தலைவர் செல்வராணி வரதராஜ் (விசிக) வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வகுமார் சின்னபையன், முன்னிலை வகித்தனர் முன்னதாக வேப்பூர் ஊராட்சி ஒன்றிய மேலாளர் ராஜேந்திரன், அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில் செலவினங்கள் குறித்தும், ஊராட்சி ஒன்றிய சில்லரை செலவினங்கள் குறித்தும் உட்பட 30க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் மேற்கொள்ளபட்டதுகூட்டத்தில் திமுக உறுப்பினர்கள், அதிமுக உறுப்பினர்கள், பாமக உறுப்பினர்கள், ஊராட்சி துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கணினி பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

ஞாயிறு தோறும்
மகளிர் மலர்
படியுங்கள்

தீபாவளி ஆஃபர்
அதவத்தூரில் (வயலூர் ரோடு)
சதுர அடி - ~~475~~
ரூ.350/- மட்டுமே
பத்திரப்பதிவு 50% இலவசம்
98422 62489

பெரம்பலூரில் மாவட்ட திமுக சார்பில்

இந்தி திணிப்பை கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்

பெரம்பலூர்,அக்.15: பெரம்பலூர் மாவட்ட திமுக சார்பில் இந்தி திணிப்பைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். பெரம்பலூரில் இன்று(15ம் தேதி) நடைபெறுகிறது. பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் இராஜேந்திரன் அறிக்கை. இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது :

அலுவல் மொழி சட்டத்தின் வாயிலாகவும்,இந்திய அளவில்அனைத்து பாடத்துறைகளுக்கும் ஒரேபொது நுழைவுத் தேர்வு திட்டத்தின் மூலமாகவும், இந்திமொழியை திணிக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க.அரசிற்கு திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் கடும் கண்டனத்தையும்,எச்சரிக்கையையும் தெரிவித்துள்ளதை உணர்ந்து உடனடியாக அதனைக்கைவிட வேண்டுமென்றும், புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் சமூகநீதிக்கு எதிரான திட்டங்களை கொண்டு வர வேண்டுமென்று நினைக்கும் ஒன்றிய பா.ஜ.கஅரசின் முடிவினை திரும்ப பெறவலியுறுத்தியும் திமுக தலைவரின் ஆணையை ஏற்று, திமுக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பிற்கிணங்க, திமுக இளைஞர் அணியும், தி.மு.க.மாணவர் அணியும் இணைந்து நடத்தும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், இன்று(15ம்தேதி) சனிக்கிழமை, காலை 9 மணியளவில், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் காந்திசிலை அருகில் நடைபெறுகிறது. மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஹரிபாஸ்கர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் - மாவட்ட ஊராட்சித் தலைவருமான குன்னம் இராஜேந்திரன் தலைமை வகிக்கிறார். பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி எம்எல்ஏ பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார். இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், இளைஞரணி, மாணவரணியின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் திமுகவினர் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும். இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

பள்ளிகல்வித்துறையில் 3 ஆண்டுகளுக்கு மேல்

பணியாற்றி வரும் கண்காணிப்பாளர்கள், அமைச்சுபணியாளர்கள் 105 பேர் டிரான்ஸ்பர்

பெரம்பலூர்,அக்.15: பெரம்பலூர் மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறையில் 3 ஆண்டுகளுக்குமேல் பணிபுரிந்துவரும் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட அமைச்சுப்பணியாளர்கள் 105பேர் பணிமாறுதல்செய்யப்பட்டு பள்ளிக்கல்வித்துறை அதிரடி நடவடிக்கை எடுத்தது.

தமிழக அளவில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலகம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலகம், வட்டாரக்கல்வி அலுவலகம், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்துவந்த அமைச்சுப்பணியாளர்கள் ஒரேபணி நிலையில் தொடர்ந்து 3ஆண்டுகள் பணிபுரிந்து வந்தால் அவர்களுக்கு பணியிட மாறுதல் வழங்கிட, தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை ஆணையர் நந்தகுமார் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த உத்தரவின் பேரில் பெரம்பலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அறிவழகன், பெரம்பலூர் மாவட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அலுவலகம், மாவட்ட கல்வி அலுவலகங்கள், வட்டாரக் கல்வி அலுவலகங்கள், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம், வட்டார ஆசிரியர் பயிற்சி நிறுவனம், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து வந்த அமைச்சுப் பணியாளர்கள் 105பேர்களுக்குப் பணியிட மாறுதல் ஆணைகளை வழங்கியுள்ளார்.

இதன்படி பெரம்பலூர் மாவட்ட அளவில் அமைச்சுப்பணியாளர்கள் நிலையிலுள்ள இளநிலை உதவியாளர்கள் 66 பேர், உதவியாளர்கள் 21 பேர், டைப்பிஸ்டு 8 பேர், கண்காணிப்பாளர்கள் 10பேர் எனமொத்தம் 105பேர் பணி மாறுதல் பெற்றுள்ளனர்.

இதில் குறிப்பாக பெரம்பலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் இருக்கை பணி கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வந்த திருநாவுக்கரசு என்பவர், வேப்பந்தட்டையில் உள்ள வட்டாரக் கல்வி அலுவலகத்தில், கண்காணிப்பாளராக பதவிஉயர்வு மூலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேரளி பகுதியில்

17ம் தேதி மின்நிறுத்தம்

பெரம்பலூர்,அக்.15: பேரளி துணைமின் நிலையத்தில் 17ஆம்தேதி மின் நிறுத்தம் செய்யப்படுகிறது என பெரம்பலூர் உதவி செயற்பொறியாளர் முத்தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது :

தமிழ்நாடு மின்சார வாரியம், பெரம்பலூர் கோட்டத்திற்குட்பட்ட பேரளி துணை மின் நிலையத்தில், வரும் 17ம்தேதி மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெறவுள்ளதால், காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை, பேரளி துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறப்படும் கிராமியப் பகுதிகளான பேரளி, ஒதியம், கல்பாடி, அசூர், சித்தளி, பீல்வாடி, குரும்பாபாளையம், கவுள்பாளையம்,மருவத்தூர், சிறு குடல், அருமடல், கீழப்புலியூர், கீ.புதூர், எஸ்.குடிகாடு, வாலிகண்டபுரம், க.எறையூர், நெடுவாசல், மருவத்தூர், குரும்பாபாளையம், செங்குணம் ஆகியப் பகுதிகளுக்கு மின்விநியோகம் தடைசெய்யப்படும். பராமரிப்புப் பணிகள் முடிந்தவுடன் மின்விநியோகம் வழங்கப் படும்என அதில் தெரிவித்துள்ளார்.

கோடாலிக் கருப்பு கிராமத்தில்

மூதாட்டி கூரை வீட்டில் தீ

தா.பழூர் அருகே உள்ள கோடாலி கருப்பூர் காலனி தெருவில் உள்ள மூதாட்டியின் வீடு தீப்பிடித்து எரிந்தது.

தா.பழூர், அக்.15: அரியலூர் மாவட்டம்தா பழூர் அருகே உள்ள கோடாலிக் கருப்பூர் வடக்கு காலனியை சேர்ந்தவர் கிருஷ்ணன் மனைவி பார்வதி 70. கிருஷ்ணன் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு உயிரிழந்த நிலையில் பார்வதி மட்டும் தனியாக கூரை வீட்டில் வசித்து வருகிறார். இந்நிலையில் வசித்து வரும் சிறிய அளவிலான கூரை வீடு மின்சாரம் மற்றும் சிலிண்டர் வசதிகள் இல்லாத நிலையில் திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது. பார்வதி அப்பகுதியில் உள்ள வீடுகளில் பாத்திரம் தேய்த்தல் வீட்டு வேலைகள் உள்ளிட்டவைகளை செய்து வருகிறார். வேலைக்கு சென்று தினமும் மாலை 7:30 மணி அளவில் வீடு திரும்புவது வழக்கமாக வைத்துள்ளார். இந்நிலையில் இன்று வேலைக்கு சென்று விட்டு மாலையில் ஏழு முப்பது மணி அளவில் வீட்டிற்கு வரும்போது வீடு தீப்பிடித்து எரிந்துள்ளது. சத்தம் போடவே அருகில் இருந்தவர்கள் ஓடி வந்து வீட்டில் தீயை அணைக்க முயற்சி செய்துள்ளனர். இருப்பினும் தீ மளமளவென பரவி வீடு முற்றிலும் எரிந்து சேதம் அடைந்தது. இதில் வீட்டில் வைத்திருந்த ரூ.5 ஆயிரம் ரொக்க பணம் மற்றும் 70 ஆயிரம் மதிப்பிலான வீடு எரிந்து சேதமடைந்தன. மேலும் குடும்ப அட்டை, ஆதார் அட்டை உள்ளிட்ட ஆவணங்களும் தீயில் கருகியது. இச்சம்பவம் குறித்து தா.பழூர் காவல்துறையினர் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெரம்பலூர் மாவட்ட பள்ளிக்கல்வித்துறையில் அதிரடி

2 ஆக இருந்த மாவட்ட கல்வி அலுவலகங்கள் 3 ஆக மாற்றம்

பெரம்பலூர்,அக்.15: பெரம்பலூர் மாவட்ட பள்ளிக் கல்வி துறையில் அதிரடி மாற்றம். இரண்டாக இருந்த மாவட்ட கல்விஅலுவலகங்கள் மூன்றாக மாற்றப்பட்டது.

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கட்டுப்பாட்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர், வேப்பந்தட்டை ஒன்றியங்களை உள்ளடக்கிய பெரம்பலூர் மாவட்டக் கல்விஅலுவலகம், வேப்பூர், ஆலத்தூர் ஒன்றியங்களை உள்ளடக்கிய வேப்பூர் மாவட்டக்கல்வி அலுவலகம் ஆகியன இயங்கிவந்தது. இவற்றிற்கு தலா ஒருவர் என 2 மாவட்டக் கல்வி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த2அலுவலகங்களின் கட்டுப்பாட்டில் அந்தந்த பகுதிகளுக்கு உட்பட்ட அனைத்து வகைப் பள்ளிகளுமே இயங்கி வந்தன. தற்போது பள்ளிக் கல்வித்துறை ஆணையரின் உத்தரவுப்படி, பெரம்பலூர், வேப்பூர் மாவட்டக் கல்விஅலுவலகங்கள் பள்ளிகள் அளவில் 3 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன்படி தற்போது பெரம்பலூர் மாவட்டக் கல்விஅலுவலராக(இடைநிலை குழந்தைராஜன்) என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். பெரம்பலூர் துறையூர் சாலையில் பெரிய கடை வீதியில் பழைய போலீஸ் ஸ்டேசன் அருகேயுள்ள இவரது அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளும் இயக்கவுள்ளன.

அதேபோல் பெரம்பலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகத்தில் விரைவில் அமையவுள்ள அலுவலகத்திற்கு பெரம்பலூர் மாவட்டக் கல்வி அலுவலராக (தொடக்கக் கல்வி) அண்ணாதுரை என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது அலுவலகக் கட்டுப்பாட்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துதொடக்கநடுநிலை பள்ளிகளும் இயங்கவுள்ளன. அதேவருவாய் கோட்டாட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் விரைவில் அமையவுள்ள அலுவலகத்திற்கு பெரம்பலூர் மாவட்டக்கல்வி அலுவலராக (தனியார் பள்ளிகள்) சண்முகசுந்தரம் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது அலுவலகக் கட்டுப்பாட்டில் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள சிபிஎஸ்சி,மெட்ரிக்குலேசன், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் நர்சரி பிரைமரி பள்ளிகள் என அனைத்துவகைத் தனியார் பள்ளிகளும் இயங்கவுள்ளன. தற்போது தொடக்கக் கல்வி மற்றும் தனியார் பள்ளிகளுக்கான மாவட்ட கல்விஅலுவலகங்கள் தற்காலிகமாக பேரளிஅரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இயங்கி வருகின்றனஎன்பது குறிப்பிடத் தக்கது.

YES BANK

எஸ் வங்கி லிமிடெட்

பதிவு & கார்பரேட் அலுவலகம்: எஸ் வங்கி இல்லம், மேற்கு விரைவு நெடுஞ்சாலை தொலைவு, சாந்தாகுரூஸ் கிழக்கு, மும்பை–400055. CIN: L65190MH2003PLC143249, மின்னஞ்சல்: communications@yesbank.in, இணையதளம்: www.yesbank.in

அசையாச் சொத்துக்கான சுவாதீன அறிவிப்பு

இவ்வாறிருக்க,

கீழே கையொப்பமிட்டவர் எஸ் வங்கி லிமிடெடின் ("வங்கி") அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 ("சட்டம்") கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 9 உடன் சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி 12.05.2022 தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி திரு. S. செங்குட்டுவன் & திருமதி S. வசந்தி கடன் கணக்கு எண் MOR052300496659 ஆகியோர் அறிவிப்பில் குறிப்பிட்ட 12.05.2022 தேதிய ₹50,45,799.70/– (ரூபாய் ஐம்பது இலட்சத்து நாற்பத்தைந்து ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்றொன்பது மற்றும் பைசா எழுபது மட்டும்) தொகையை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப்பெற்றத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறுக் கோரியிருந்தார்.

கடன்தாரர் / கடனீடு வழங்கியோர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார், இதன்மூலம் கடன்தாரர்/ கடனீடு வழங்கியோர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை 13.10.2022 நாளில் சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர் / கடனீடு வழங்கியோருக்கு குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்கு பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது கீழே குறிப்பிட்ட சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் மேலும் மேற்கூறிய சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் 12.10.2022 தேதிய ₹49,25,264.59/– (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சத்து இருபத்தைந்து ஆயிரத்து இருநூற்று அறுபத்து நான்கு மற்றும் பைசா ஐம்பத்தொன்பது மட்டும்) தொகைக்காக, அதற்குரிய செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் வட்டி உட்பட அனைத்து பிற நிலுவைத்தொகைகளுடன் சேர்த்து வங்கியின் வசூலுக்கு உட்படும்.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(8) கீழ், எங்களுக்கு ஏற்பட்ட அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் சேர்த்து எங்கள் நிலுவைகளானது விற்பனை அல்லது பெயர்மாற்றத்துக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்பு எந்த நேரத்திலும் செலுத்தப்பட்டு விட்டால், கடனீட்டுச் சொத்து ஆனது எங்களால் விற்பனை அல்லது பெயர்மாற்றம் செய்யப்படாது, மேலும் அந்த கடனீட்டுச் சொத்தின் பெயர்மாற்றம் அல்லது விற்பனைக்காக எங்களால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

அடமானச் சொத்து விவரங்கள்

அட்டவணை–அ

கரூர் மாவட்டம், கரூர் பதிவு மாவட்டம், மேலக்கரூர் சார் பதிவு மாவட்டம், கரூர் வட்டம், இனாம் கரூர் கிராமம், அயன் புன்செய் பழைய சர்வே எண் 578 விஸ்தீரணம் பரப்பளவு ஏக்கர் 8.89 சென்ட்கள் இதில் பரப்பளவு ஏக்கர் 1.32 சென்ட்கள், அயன் புன்செய் சர்வே எண் 580 விஸ்தீரணம் பரப்பளவு ஏக்கர் 0.69 சென்ட்கள் இதில் பரப்பளவு 0.17 சென்ட்கள் மொத்தத்தில் விஸ்தீரணம் பரப்பளவு ஏக்கர் 1.49 சென்ட்கள் இதில் பரப்பளவு ஏக்கர் 0.80 சென்ட்கள் அதன் சார் பிரிவு சர்வே எண் 366/5C விஸ்தீரணம் பரப்பளவு ஹெக்டேர் 0.13.5 ஏர்ஸ் ஆனது ஏக்கர் 0.33 ¼ சென்ட்களுக்கு சமமான நிலம் பின்வரும் நான்கு எல்லைகளுக்குள் அமைந்துள்ளது.

தெற்கிலிருந்து வடக்காக புறவழிச் சாலையின் கிழக்கு, செங்குட்டுவ கவுண்டர் வகையறாவுக்கு சொந்தமான நிலத்தின் வடக்கு, சர்வே எண் 366/4 இல் அடங்கிய நிலத்தின் மேற்கு, சர்வே எண் 366/3C இல் அடங்கிய நிலத்தின் தெற்கு.

இந்த எல்லைகளுக்குள் விஸ்தீரணம் பரப்பளவு ஹெக்டேர் 0.13.5 ஏர்ஸ் ஆனது 0.33 ¼ சென்ட்களுக்கு சமமான நிலம் மற்றும் அதற்கு தொடர்புடைய அனைத்து வழக்கமான பாதை மற்றும் பயன்பாட்டு உரிமைகளுடன்.

இடம் : சென்னை
நாள் : 13.10.2022

(அதிகாரப்பூர்வ அதிகாரி)
எஸ் வங்கி லிமிடெட்.

ICICI Home Finance

கார்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி–குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை–400059, இந்தியா
கிளை அலுவலகம்: 2வது தளம், எண்: 75 D, இலட்சுமி வால்ட்ஸ், மனை–A–8, சாலை ரோடு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி–620018

[விதி 8(6) விதிமுறையை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்ட/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **அடையாளப்பூர்வ சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலம் நாள் & நேரம்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)
1.	M K முருகன் (கடன்தாரர்) மாலதி M (உப–கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHTNJ00000829262 & NHTNJ00000829263	மனை எண் 37, 38, S.F. எண் 271/1, 271/4, சிம்கோ காலனி 2வது குறுக்கு, கே.அபிஷேகபுரம் மண்டலம், திருச்சி வட்டம், திருச்சி மாவட்டம்–620015.	₹94,49,125/– 6 அக்டோபர், 2022	Rs. 54,65,880/- Rs. 5,46,588/-	21 அக்டோபர், 2022 காலை 11.00 மணி – பிற்பகல் 03.00 மணி	31 அக்டோபர், 2022 பிற்பகல் 02.00 மணி – 03.00 மணி

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை ஆக்சன் டைகர் இணையதளத்தில் (URL இணைப்பு– https://sarfaesi.auctiontiger.net/EPROC/) நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிக்கப்படுவோர் **28 அக்டோபர், 2022 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைத்தொகைகளை செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், 2வது தளம், எண்: 75D, இலட்சுமி வால்ட்ஸ், மனை–A–8, சாலை ரோடு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி–620018** இடத்தில் **28 அக்டோபர், 2022 மாலை 04.00 மணி** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் உ காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) மேற்குறிப்பிட்ட காலத்தின்படி தங்கள் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்க இயலவில்லை எனில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்ட பிரதியானது **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், 2வது தளம், எண்: 75D, இலட்சுமி வால்ட்ஸ், மனை–A–8, சாலை ரோடு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி–620018** இடத்தில் **28 அக்டோபர், 2022 மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **திருச்சியில்** மாற்றத்தக்க வகையில் **"ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்–ஏலம்"** என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடை **7021072869** இல் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார். விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

நாள் : அக்டோபர் 15, 2022
இடம் : திருச்சி

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஜசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்